**செய்தி வெளியீடு எண்:080** **நாள் :16.02.2015**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று (16.02.2015) இந்து சமய அறநிலையத் துறை செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம், சென்னை, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலக கூட்டரங்கில், மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழக வரலாறு, கலை மற்றும் கலாச்சாரத்தை எடுத்துக்கூறும் கருவூலங்களாக திகழும் திருக்கோயில்களுக்கு, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சிதிலமடைந்த திருக்கோயில்களை கண்டறிந்து அவைகளுக்கு முன்னுரிமை அளித்து திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த 4 ஆண்டுகளில் 6,965 திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இது முந்தைய ஆண்டுகளில் எட்டப்படாத ஒரு வரலாற்றுச் சாதனை என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 2014–15ஆம் ஆண்டில் மட்டும் 1,614 திருக்கோயில்களை திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. என்றும், மேலும் 216 திருக்கோயில்கள் குடமுழுக்கு செய்யப்பட உள்ளது என்றும் தெரிவித்தார். இந்து சமய அறநிலையத்துறை

வரலாற்றில் முதல் முறையாக, தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை, திருப்பணி செய்திட ஆலோசனை பெற வேண்டி தொல்லியல்துறையில் அனுபவம் பெற்ற அலுவலர்களை கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகை திருக்கோயில்களை புனரமைக்க ஆண்டு ஒன்றுக்கு 22.50 கோடி ரூபாய் வீதம் கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் கிராமப்பகுதியில் உள்ள சிறு திருக்கோயில்களையும் திருப்பணி செய்யும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் 4,904 திருக்கோயில்களுக்கு 24.52 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கடந்த 4 ஆண்டுகளில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான 114 திருத்தேர்களை சீரமைத்து திருத்தேரோட்டம் நடத்தப்பட்டது என்றும், 604 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டன என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னதமான அன்னதானத்திட்டம் 2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பின்னர் 360 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு இன்றளவில் 518 திருக்கோயில்களில் சிறப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 10 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, தினந்தோறும் சுமார்

50 ஆயிரம் பக்தர்கள் பயன் பெறுகின்றனர். மேலும், நாள் முழுவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலிலும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு திருக்கோயில்களில் மட்டும் நாள் ஒன்றுக்கு சராசரியாக 2 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 8 ஆயிரம் பக்தர்கள் பயன் பெறுகின்றனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் விதி எண் 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் தனி அக்கரை செலுத்தி முனைப்புடன் நிறைவேற்ற வேண்டுமென்றும், ஆறுமாத காலத்திற்குள் அனைத்து அறிவிப்புகளையும் முடிக்கும் வகையில் பணியில் வேகமும், விவேகமான செயல்பாடும் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் ரூ.25 ஆயிரம் மையநிதியை ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இதன்படி 11,999 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் செம்மையாக நடைபெறுகிறது. திருக்கோயில்களுக்கு சொந்தமான 5,400 கட்டுமானங்களில் நிறைவேற்றப்பட்ட மழைநீர் சேகரிப்பு திட்டத்தை செம்மையாக பராமரிக்கவும், திருக்குளங்களில் நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை சீரமைக்கவும், பராமரிக்கவும் முனைப்புடன் செயல்பட

வேண்டுமென்று அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, **2016**ம் ஆண்டு பிப்ரவரி **22**ஆம் நாள் நடைபெறவுள்ள கும்பகோணம் மகாமகம் பெருவிழாவினை முன்னிட்டு **69** திருக்கோயில்களுக்கு ரூ.**12** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில்களின் திருப்பணிகளை நடத்தி **6** மாதத்திற்குள் குடமுழுக்கினை நடத்தும் வகையில் விரைவுபடுத்தி, மகாமகப் பெருவிழா சிறப்புடன் நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், திருக்கோயில்களுக்கு சொந்தமான **1,683** ஏக்கர் பரப்பளவுள்ள ரூ.**2,000** கோடி மதிப்புள்ள நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருக்கோயில் நிலங்கள் மற்றும் கட்டிடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் துறை அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கூறினார். திருக்கோயில்கள், திருமடங்கள், அறங்கட்டளைகள் ஆகியவற்றுக்குச் சொந்தமான நிலம், மனை, கட்டிடம் ஆகியவற்றில் இருந்துவரும் குத்தகைதாரர்கள் மற்றும் வாடகைதாரர்களிடமிருந்து வாடகை நிலுவை தொய்வின்றி வசூல் செய்யப்பட வேண்டுமென்றும், திருக்கோயில் வளாகங்களில் களவு

எச்சரிக்கை மணி பொறுத்துதல் போன்ற களவு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிடவசதி, தங்குமிடம் போன்ற பணிகளை முடுக்கிவிட்டு இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் சிறப்புடன் அமைந்திட அலுவலர்கள் அனைவரும் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் செயல்பட வேண்டுமென்று அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ரா.கண்ணன்,இ.ஆ.ப., அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.தனபால், மண்டல இணை ஆணையர்கள், மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூடுதல் தலைமைச் செயலாளர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**